

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.3.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான பிரான்ஸ் நாட்டுத் தூதர் தியர்ரி மேத்தவ் (Mr. Thierry Mathou) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், புதுச்சேரி மற்றும் சென்னைக்கான பிரான்ஸ் நாட்டு துணைத் தூதர் எட்னே ரோலண்ட் பீக் (Mr. Etienne Rolland Piegue), பிரான்ஸ் தூதரகத்தின் பொருளாதார அலுவலர் கார்ல் பௌலங்கர் (Mr. Carl Boulanger), பிரான்ஸ் தூதரகத்தின் அலுவலர் திருமதி மார்குரைட் சல்லேஸ் (Ms. Marguerite Salles), பத்திரிகை மற்றும மரபு அலுவலர் திருமதி விஜயசரஸ்வதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.3.2025) முகாம் அலுவலகத்தில், பொருளாதார வல்லுநர் ஆனந்த் சீனிவாசன் சந்தித்து, சங்ககாலம் முதல் சமூகநீதிக் காலம் வரையிலான தமிழர்களின் நிதி நிர்வாகச் சிறப்புகள், பண்டைய வணிகம், வரிவிதிப்பு முறைகள், காலனிய கால நிதிநிர்வாக நடைமுறைகள், நவீன தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கைகள் போன்றவற்றின் பெருந்தொகுப்பாகவும் வரலாற்று ஆவணமாகவும் ‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ நூலினை வெளியிட்டமைக்காக பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### ஒன்றிய அரசு பட்ஜெட் : ஜல் சக்தி அமைச்சக மானியக் கோரிக்கை மீதான விவாதம்

# கங்கை - காவிரி நதிகள் இணைப்பை விரைந்து மேற்கொள்க!

## நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 21 -

ஒன்றிய அரசின் அடுத்து வரவுள்ள நிதி ஆண்டு 2025 26க்கான வரவுசெலவு அறிக்கை தற்பொழுது நாடாளுமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அது தொடர்பாக அமைச்சரக வாரியான விவாதங்கள் தினமும் நடைபெற்று வரும் நிலையில் நேற்று, அதாவது 19.03.2025 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தின் மானியக் கோரிக்கைகள் நாடாளுமன்ற மக்களவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளபட்டது. விவாதத்தில் கலந்து கொண்டு மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

“தலைவர் அவர்களே! தங்கள் அனுமதியுடன் ஜல் சக்தி அமைச்சகத்தின் 2025 26 நிதி ஆண்டுக்கான மானியக் கோரிக்கை குறித்து வாதிட விரும்புகிறேன். ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் இரண்டு துறைகள் உள்ளன. ஒன்று குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை. மற்றொன்று நீர் வளங்கள், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர்ப்பித்தல் துறை ஆகும்.

**80 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிந்துள்ளன:**

குடிநீர் துறை ‘ஜல் ஜீவன் மிஷன்’ என்ற திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகிறது. நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தினந்தோறும் தலா 55 லிட்டர் வீதம் குடிநீர், குழாய் வழியாக அவரவர் வீடுகளில் வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் உருவாக்கபட்டுள்ளது. கடந்த 2024ஆம் ஆண்டிலேயே இந்த ஜல் ஜீவன் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இன்று நாம் 2025ஆம் ஆண்டில் இருக்கிற நிலையிலும் இத்திட்டம் இன்னும் முடிந்தபாடில்லை. இதுவரை 80 விழுக்காடு அளவுக்குத்தான் திட்டப் பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளது. 15 கோடி இல்லங்கள் மட்டுமே குடிநீர் குழாய் இணைப்பு பெற்றுள்ளன. இன்னும் மீதமுள்ள 20 விழுக்காடு வீடுகளில் குழாய் இணைப்பு நிறுவப்படவில்லை.

எனவே இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு திட்டப் பணிகளை முடுக்கி விட்டு விரைவில் நிறைவேற்றி வைக்க அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி குறிப்பிட விரும்புகிறேன்.

**ரூ.50,000 கோடி நிதி செலவிடப்படவில்லை:**

இந்த விஷயம் தொடர்பாக ஒரே ஒரு முக்கியமான கேள்வி ஒன்றையும் எழுப்பிட விழைகிறேன். 2023-24 ஆம் நிதி ஆண்டில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்துக்காக செலவிடப்பட்ட தொகை ரூ.69,992 கோடி. ஆனால், சென்ற நிதி ஆண்டில் பட்ஜெட்டில் ரூ.70,000 கோடி ஒதுக்கீடு செய்யபட்ட போதிலும் ரூ.22000 கோடி மட்டுமே அரசு செலவு செய்துள்ளது. ஏறத்தாழ ரூ.50000 கோடி அளவுக்கு ஒதுக்கப்பட்ட நிதி இது வரை பயன்படுத்தவில்லை. இப்படி வழங்கப்பட்ட நிதி செலவிடப் படாமைக்கான காரணங்கள் என்ன?

2019ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.7 லட்சம் கோடி செலவு மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. இப்போது வரை ரூ.3 லட்சம் கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இன்னும்



ரூ.4 லட்சம் கோடி அளவுக்கு திட்ட நிதி செலவிடப்பட வேண்டும். இந்த நிலையில்தான் இன்று ஜல் ஜீவன் மிஷன் திட்டம் உள்ளது. கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் இந்த முக்கியமான திட்டம் இந்த அளவுக்கு மட்டுமே முன்னேற்றம் கண்டுள்ளது.

நதிகள் இணைப்பு 2014 தேர்தல் வாக்குறுதி:

2014ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் நமது நண்பர் மோடி அவர்கள், பல்வேறு மாநிலங்கள் கடந்து பாயும் ஆறுகளை இணைப்பதைக் கட்டாயம் செய்வேன் என்று ஒரு வாக்குறுதியை தனத தேர்தல் பரப்புரையின்போது அளித்தார். இணைக்கப்படும் நதிகளில் இமாலய நதிகள் மற்றும் தீபகற்ப நதிகள் அடங்கும் என்று குறிப்பிட்டார். ஆனால், இது தொடர்பான எந்த திட்டமும் இல்லை. தீபகற்ப ஆறுகள், நீர்ப் பற்றாக்குறை கொண்டவை. மாறாக இமயமலையில் இருந்து பாயும் ஆறுகள் உபரி நீர்ப் பெருக்கு வாய்க்கப் பெற்றவை. எனவே, பற்றாக்குறையாக உள்ள தென்னக நதிகளுடன் மிகுதியாக நீர்வரத்து பெற்றுள்ள இமயமலை நதிகள் இணைக்கப் படுவது அவசியம்.

**ஆர்தர் காட்டன் துவக்கிய முன்னெடுப்பு:**

சற்று முன் இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜெகதாம்பிகா பால் அவர்கள் குறிப்பிட்டதைபோல இந்திய நதிகள் இணைப்பு திட்டம் பிரிட்டிஷ் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன் அவர்களால் முதன்முதலாக முன்மொழியப்பட்டது. திட்டம் தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டார். நாடு விடுதலை அடைந்த பிறகு வல்லுனர்கள் குழு பலமுறை அமைக்கப்பட்டு நதிகள் இணைப்பு பற்றிய விரிவான ஆய்வுகள் செய்யப் பட்டன.

**கே.எல்.ராவ் அளித்த உறுதிமொழி:**

இன்னும் சொல்லப் போனால் அன்றைக்கு அமைச்சராக இருந்த கே.எல்.ராவ் அவர்கள், தென்னிந்திய நதிகள் இணைக்கப்படும் என இந்த அவையில் தெரிவித்தார். ஆனால், இதுவரை இதற்கான முயற்சிகள் எதுவும் தொடங்கப்படவில்லை என்பது வருத்தமான ஒன்றாகும். மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி உள்ளிட்ட தென்னிந்திய தீபகற்ப நதிகள் முதல்கட்டமாக இணைக்கப்பட வேண்டும். ஏனென்றால் இத்தகைய இணைப்பு மிகுந்த பயனளிக்கக் கூடியது.

**கென் பேட்வா ஆறுகள் இணைப்பு:**

இதற்கிடையில், மாண்புமிகு பிரதமர் திரு.மோடி அவர்கள் அண்மையில் கென் மற்றும் பேட்வா ஆறுகளை இணைக்க முன் வந்துள்ளார். உத்தரப்பிரதேசம் மற்றும் மத்தியபிரதேசம் மாநிலங்களிடையே 221 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த இணைப்புக் கால்வாய்த் திட்டம் தொடர்பான பணிகள் தொடங்கப் பட்டு, அதற்காக ரூ.9000 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை, நான் ஆதரிக்கிறேன். ஆனால், திட்டப் பணிகள் எப்போது முடியும் என தெரியவில்லை.

**மும்பை - அகமதாபாத் புல்லட் ரயில் திட்டம் லாபம் தருமா?**

எனவே, தென்னிந்திய நதிகள் இணைப்புத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த பிரதமர் மோடி முன்வர வேண்டும். இந்திய நதிகள் இணைக்கப் படுமானால் கிடைக்கும் பலன்கள் அளவற்றது. நதிகள் இணைப்பின் காரணமாக நல்ல உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து வசதி கிடைக்கும். இதன் வாயிலாக வட இந்தியா மற்றும் தென்னிந்தியா இடையே இரு வழிகளிலும் சரக்குப் போக்குவரத்து நடைபெற ஏதுவாகும். வழிநெடுக ஆங்காங்கே, இணைப்புக் கால்வாய் நீர்மட்ட வேறுபாடுகள் புனல் மின் நிலையங்கள் அமைந்திட உதவும். இதன் காரணமாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மாசுக் கட்டுப்பாடு, மீன்வளப் பெருக்கம், வேளாண் வளர்ச்சி என எண்ணற்ற பயன்களை வழங்கவல்லது நதிகள் இணைப்புத் திட்டம்.

மும்பை அகமதாபாத் இடையே ரூ.1 லட்சம் கோடி அளவுக்கு மிகப்பெரிய முதலீட்டில் புல்லட் ரயில் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஆனால், இந்தத் திட்டம் பொருளாதார ரீதியாக பயனுள்ள லாபகரமானதாக இருக்குமா என்பது கேள்விக்குறியே.

எனவே, எல்லா வகையிலும் பயன் தருவதோடு லாபகரமாகவும் உள்ள நதிகள் இணைப்புத் திட்டத்தை அரசு முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த வேண்டும் என பிரதமர் மோடி அவர்களையும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு உரையாற்றினார்.

### 10 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்!

# திருமண புகைப்படம் - வீடியோ எடிட்டிங் பயிற்சி!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, மார்ச் 21 -

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 10 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் திருமண புகைப்படம் மற்றும் வீடியோ எடிட்டிங் பயிற்சி வரும் 25.03.2025 முதல் 04.04.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் திருமண புகைப்படம் எடுத்தல் என்றால் என்ன, புகைப்படம் எடுத்தல் பற்றிய வரலாறு, புகைப்படத்தின் அடிப்படைகள், ஒளியமைப்பு, கலவை மற்றும் மேம்பட்ட புகைப்பட நுட்பங்கள் கவனம் செலுத்தும் முறைகள், திருமண புகைப்படம் எடுத்தல் என்றால் என்ன, பாரம்பரிய புகைப்படம் எடுத்தல் மேம்பட்ட நுட்பங்கள், நேர்மையான புகைப்படம் எடுத்தல் மேம்பட்ட நுட்பங்கள், திருமண உருவப்படங்கள் மேம்பட்ட நுட்பங்கள், உங்கள் குழுவை உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல், உயர்நிலை புகைப்பட மறுசீரமைப்பு, ஆல்பம் வடிவமைப்பு, திருமண புகைப்படக் கலைஞர் மற்றும் திருமணமாக எப்படி சம்பாதிப்பது புகைப்பட வணிகம், திட்டங்கள் மற்றும் வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்கு பெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 8668108141 / 8668102600.

**முன்பதிவு அவசியம்:**

**அரசு சான்றிதழ் வழங்கப்படும்.**

### சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

# கெங்கவல்லி, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், மார்ச் 21-

சேலம் கிழக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட 081 - கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி, மற்றும் 082 - ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான பாகமுகவர்கள் (BLA 2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக்கூட்டம் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள் (BLA2), மற்றும் பூத்



கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மட்டும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

தேதி மற்றும் நேரம் - நகர, ஒன்றிய, பேரூர் இடம் விவரம் வருமாறு:-

082 - ஆத்தூர் சட்டமன்ற தொகுதி:

22.03.2025 காலை 10.00 - ஆத்தூர் ஒன்றியம் - அண்ணா கலையரங்கம், ஆத்தூர்.

22.03.2025 மதியம் 12.00 - ஆத்தூர் நகரம், நரசிங்கபுரம் நகரம், துளுவ வேளாளர் மண்டபம், ஆத்தூர்.

22.03.2025 மாலை 3.00 - ஒருங்கிணைந்த பெ.நா.பாளையம் ஒன்றியம் - கண்ணைய ஆசாரி திருமண மண்டபம், ஏத்தாப்பூர்.

081 - கெங்கவல்லி சட்டமன்ற தொகுதி

24.3.2025 காலை 10.00 - ஒருங்கிணைந்த தலைவாசல் ஒன்றியம் - கொங்கு வேளாளர் திருமண மண்டபம், தலைவாசல்

24.3.2025 மதியம் 12.00 கெங்கவல்லி ஒன்றியம் - ரெட்டியார் திருமண மண்டபம் கெங்கவல்லி.

இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தேர்தல் அங்கிகார வெற்றி விழா விழுப்புரத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு எழுச்சி உரையாற்றினார். ம.தி.மு.க .பொதுச் செயலாளர் வைகோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சண்முகம், காங்கிரஸ் கட்சி பீட்டர் அல்போன்ஸ், மனிதநேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர் அப்துல் சமது எம்.எல்.ஏ., விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, வி.சி.க. பொதுச் செயலாளர்கள் து.ரவிக்குமார் எம்.பி., சிந்தனைச்செல்வன் எம்.எல்.ஏ., துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் மஸ்தான் எம்.எல்.ஏ., இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, வி.சி.க. எம்.எல்.ஏ.க்கள் பாபு, நவாஸ், பாலாஜி, கட்சியின் முதன்மைச்செயலர் பாவரசு, தேர்தல் பணிக் குழு மாநிலச் செயலர் குணவழகன், வி.சி.க. மாவட்டச் செயலாளர்கள் பெரியார், திலிபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நேற்று முன்தினம் (19.3.2025), தலைமைச் செயலகத்தில், 2024–2025 ஆம் ஆண்டின், நெடுஞ்சாலைத்துறை திட்டப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாகவும், 2025–2026 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில் இடம்பெறவேண்டிய கொள்கைகள் தொடர்பாகவும், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கரபாண்டியன், முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.